தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

வெள்ளிக்கிழமை, 1979 மார்ச் 23.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. அறிவிப்பு.

(அ) திரு. ஜெ.பி.யின் உடல் நிலை குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தவறானத் தகவல் தரப் பட்டதற்கு வருந்துகிறோம்; சரியானத் தகவல் கிடைத்ததற்காக மகிழ்ச்சியடைகிறோம்.

(2) அரசினர் தீர்மானம்.

விதி 22-ஐத் தளர்த்துவது குறித்து.

மாண்புமிகு திரு கி. மனோகரன்: பேரவைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

''சட்ட மன்றப் பேரவையில் முதல் ஒரு மணி நேரம் ''வினாக்கள்-விடைகள்' என்றுள்ள சட்டமன்றப் பேரவை விதி 22-ஐ இன்று தளர்த்தி அந்நேரத்தை வேறு அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒரு மனதாக நிறைவேற்றப்பெற்றது.

(3) அறிக்கை அளித்தல்.

மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கையை அளித்தல்.

திரு. கா. செங்கோடன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தொழிற்பேட்டைகள் உள்ளிட்ட கிராம மற்றும் சிறு தொழில்கள் மீது மதிப்பீட்டுக்குழு தன்னுடைய 7-வது அறிக்கையை அவைக்கு அளிக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன். வணக்கம்.